# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2004/51 - 2017 පෙබරවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.02

*2004/51 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம்ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*22 (1) (ஊ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*கட்டளை இல. 33*

*விசேட இல. க/14*

*1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 1986 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, காணி அமைச்சர் ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் :-*

*(அ) இக்கட்டளைக்கான நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழில் காணிகள், இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எவ்வாட்களின் பெயர்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளனவோ அவ்வாட்களுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்மென்றும் ;*

*(ஆ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்தபதிவில் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழில் காணிகள், இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டனவென்றும் அத்தகைய ஆட்கள் எந்த குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்தனரோ அந்தக் குடும்பத்தலைவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதெனக் கருதப்பட்ட காணிப்பரப்பில் அத்தகைய கமத்தொழில் காணிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனவென்றும் ;*

*(இ) இக்கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்கள், மேற்கூறப்பட்ட சட்டத்தின் நியதிகளின்படி கமத்தொழில் காணியின் மீதான உச்சவரம்புவிதிக்கப்பட்ட நேரத்தில் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தனரென்றும் ;*

*(ஈ) இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட கமத்தொழில் காணிகள் சொல்லப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எவரேனுமாளுக்குப் பராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும் ; அத்துடன்*

(உ) சொல்லப்பட்ட சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய கமத்தொழில் காணிகள் தொடர்பில் நட்டஈடு எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லையென்றும்,

இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஜோன் அன்தனீ எம்மானுவெல் அமரதுங்க,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
இல. 1200/6, "மிஹிகத மெதுர",
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 02.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| நிகதளுபொத்த வெலிவிட்ட வத்த என்ற முகவரியைச் சேர்ந்த லூய் தீசால ஹேமந்த பீரிஸ்<br><br>பத்தரமுல்லை ஸ்ரீ சுபூதீபுர ரம்யா மாவத்தை,<br>இல. 42 யைச் சேர்ந்த இஷிடா குமாரி மெண்டிஸ் | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவில் மஹகல்பொட மெகொட கோறளை சிறு பிரிவில் உடுகொடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், வடக்கு : இறுதி கிராம வரைபட இல. 1324 இன் பிற்சேர்க்கை இல. 4 இல் காணித்துண்டு இலக்கம் 2 ; கிழக்கு : காணித்துண்டு இலக்கம் O $^{987}$ மற்றும் N $^{98\ 7A}$ ; தெற்கு : வேகொல்ல கிராமம் மற்றும் கட்டுகெந்த வாய்க்காலும் ; மேற்கு : கட்டுகெந்த வாய்க்கால் எல்லைக்குள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இல.1324 இன் பிற்சேர்க்கை இல. 4 இல் காணித்துண்டு இலக்க, 3 ஆக காட்டப்பட்டுள்ளதுமான வெலிவிட வத்த எனும் காணியில் 31 ஏக்கர் 1 றூட் 33 பேர்ச்சஸ் அளவுகொண்ட காணிப்பகுதியும் அதனுள்ளடங்கிய சகலதும், |
| | வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவில் மஹகல்பொட மெகொட கோறளை சிறு பிரிவில் உடுகொடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், வடக்கு : இறுதி கிராம வரைபட இல. 1337 இன் பம்பேகமவும் ; கிழக்கு : இறுதி கிராம வரைபட இல. 1323 இன் நம்பிகம மற்றும் இறுதி கிராம வரைபட இல. 1322 யின் மொரணேகமவும் ; தெற்கு : காணித்துண்டு இல. L $^{987C}$ மேற்கு : கம்சபை வீதியில் எல்லைக்குள் நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 1324 இன் பிற்சேர்க்கை இல. 4 யில் காணித்துண்டு இலக்க 4 ஆக காட்டப்பட்டுள்ளதுமான வெலிவிட்ட வத்த எனும் காணியில் 06 ஏக்கர் 0 றூட் 35 பேர்ச்சஸ் அளவுகொண்ட காணிப்பகுதியும் அதனுள்ளடங்கிய சகலதும். |
| | வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவில் மஹகல்பொட எகொட கோறளை சிறு பிரிவில் தெவெத்தகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், வடக்கு : கட்டுகெந்த வாய்க்கால் மற்றும் வேகொல்ல கிராமமும் ; கிழக்கு T $^{980B}$ உம் ; தெற்கு : காணித்துண்டு இல. T $^{980D}$ உம் ; மேற்கு : ஆரம்ப வரைபட 2277 இல் காணித்துண்டு இலக்கம் P $^{1155}$ மற்றும் ஆரம்ப வரைபட இல. 2273 யில் W $^{1153}$ ஆம் இலக்க காணித்துண்டிற்கும் எல்லைக்குள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 1326 இன் பிற்சேர்க்கை இல. 3 யில் காணித்துண்டு இல. 4 ஆக காட்டப்பட்டுள்ளதுமான வெலிவிட்டவத்த எனும் காணியில் 10 ஏக்கர் 1 றூட் 00 பேர்ச்சஸ் அளவுகொண்ட காணிப்பகுதியும் அதனுள்ளடங்கிய சகலதும். |

02- 686

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.